மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

30.11.2022 புதன்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# கிழக்கு மாகாணம் எட்டாம் இடத்தில் இருந்து நான்காம் இடத்திற்கு முன்னேற்றம்



**வி.ரி.சகாதேவராஜா)**

அண்மையில் வெளியான 2021 கபொத. சாதாரண தரப் பரிட்சை பெறுபேறுகளின்படி தேசிய நிலைப்படுத்தலில் கிழக்கு மாகாணம் நான்காம் இடத்திற்கு முன்னேறி இருக்கின்றது. கடந்த வருடம் எட்டாம் நிலையில் இருந்த கிழக்கு மாகாணம், இம்முறை நான்காம் இடத்திற்கு முன்னேறியிருப்பது மகிழ்ச்சியான செய்தி என கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார். பரீட்சை திணைக்களத்தின் தேசிய ரீதியிலான பகுப்பாய்வு வெளியான நிலையில் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்..தேசிய ரீதியில் 100 வலயங்களிலே மட்டக்களப்பு வலயம் முதலிடத்தை பெற்று மாகாணத்துக்கு பெருமை சேர்த்துள்ளது.

இது தவிர மட்டக்களப்பு மத்தி, அக்கரைப்பற்று, கல்முனை, தெஹியத்தகண்டிய போன்ற சில வலயங்கள் மாகாண ரீதியிலும் தேசிய ரீதியிலும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. இது கிழக்கு மாகாணத்தின் கல்வித் தர வளர்ச்சியில் ஒரு மைல்கல். இதனுடன் சம்பந்தப்பட்ட மாணவர்கள் தொடக்கம் அதிகாரிகள் வரை அனைவரையும் நன்றியோடு பாராட்டுகின்றேன் என்றார்...

## எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விவகாரம் தொடர்பாக மீண்டும் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

இலங்கையின் கடல் எல்லையில் கடந்த மே 2021 இல் எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்து காரணமாக தீப்பற்றி எரிந்தமையால் கடலோர சுற்றுச்சூழல் அமைப்பிற்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்தியது.இதன் விளைவாக,நாட்டின் மேற்கு கடலோர பகுதியில் மீன்பிடித் தொழிலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.இதனால் ஏற்பட்ட மொத்த சேதத்திற்கு காப்புறுதி நிறுவனங்கள் ஓரளவு இழப்பீடு வழங்கியிருந்தாலும்,இதுவரையில் பெறப்பட்ட இழப்பீடு தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தவறியுள்ளது.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (30) பாராளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27ஃ2 இன் கீழ் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்.

02

# தெற்குக்குத் தேவையென்றால் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை வைத்துக் கொள்ளுங்கள்

தெற்குக்குத் தேவையென்றால் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை வைத்துக் கொள்ளுங்கள். நிரந்தரமாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை நீங்கள் கொடுக்க வேண்டுமென்றால் இணைந்த வடகிழக்கில் முழு அதிகாரங்களையும் பரவலாக்கி ஒரு சமஸ்டி அடிப்படையிலான ஒரு தீர்வைக் கொடுத்தால்தான் இந்த நாடு எதிர்காலத்தில் ஒரு சுபீட்சமான நாடாக இருக்கும் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார் பாராளுமன்றத்தில் நடைபெற்ற சுகாதார அமைச்சு, புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான

02

## தேசியத்தில் 100 வலயங்களில் மட்டக்களப்பு வலயம் முதலிடம்

**( வி.ரி. சகாதேவராஜா)**

அண்மையில் வெளியான க.பொ.த. 2021(22)சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பரீட்சை திணைக்களம் பகுப்பாய்வு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 9 மாகாணங்களில் தென் மாகாணம் முதலிடம் வகிக்கிறது. 25 மாவட்டங்களில் மாத்தறை மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. அதேவேளை 100 வலயங்களில் மட்டக்களப்பு வலயம் முதலிடம் வகிக்கிறது. மாகாணத்தை பொறுத்தவரை தென் மாகாணம் முதலிடத்தையும் மேல் மாகாணம் இரண்டாம் இடத்தையும் சபரகமுவா மாகாணம் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளது.

கிழக்கு மாகாணம் நான்காம் இடத்தை பிடித்துள்ளது. மாவட்டத்தை பொறுத்தவரையில் மாத்தறை மாவட்டம் முதலிடத்தையும் கொழும்பு மாவட்டம்

## பலஸ்தீன் நாட்டினை இஸ்ரேவிலிடமிருந்து விடுவிப்போம்

**(அஷ்ரப் ஏ சமத்)**

பலஸ்தீன் இலங்கை ஒருமைப்பாட்டுக்குழு ஏற்பாடு செய்திருந்த பலஸ்தீன் நாட்டினை இஸ்ரேவிலிடமிருந்து விடுவிப்போம் என்ற தலைப்பில் செவ்வாய்க்கிழமை 29 பி.எம்.ஜ.சி.எச்ல் நடைபெற்றது. இந் நிகழ்வு பலஸ்தீன் மக்களுடனான சர்வதேச ஒருமைப்பாட்டுத் தினத்தைக் கடைப்பிடிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. பலஸ்தீன் இலங்கை ஒருமைப்பாட்டுக் குழுவின் தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பிணர் விமல் ரத்னாயக்க, ஐக்கிய நாடுகள் இலங்கைக் காரியாலயத்தின் வதிவிடப் பிரநிதி ஹனா சிங்கர் இத்துறை சார்ந்த ஆராய்ச்சியாளர் திரு.குசும் விஜயதிலக்க, பலஸ்தீன் தூதுவர் கலாநிதி சுகைர் மொஹமட் ஹம்துல்லா செய்யத் இக்குழுவின் உபதலைவரும் சன்டே டைம்ஸ் .சிரேஸ்ட ஊடகவியலாளா

## மாணவர்களது பிரச்சினைகளை தீர்க்கமுயன்றால் பிரச்சினைகள் உருவாகின்றன இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்




மாணவரின் ஒழுக்கம் மற்றும் போதைப் பொருள் பாவனை போன்ற பிரச்சனைகளுக்கு ஆசிரியர்கள் நேரடியாக நடவடிக்கைகளை எடுக்க முற்படுகின்ற போது பல்வேறு பிரச்சனைகளுக்கும் சிரமங்களுக்கும் உள்ளாகின்றார்கள் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் சங்கத்தின் உபசெயலாளர் யாழினி கங்கா சுதன் தெரிவித்தார். தற்போது பாடசாலைகளில் மாணவர்களின் நடவடிக்கை தொடர்பில் முடிவுகளை எடுப்பதில் ஆசிரியர்கள் பல்வேறுபட்ட பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். எனவே இவ்விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் சங்கத்தின் தலைமை காரியலயத்தில் இடம் பெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் உபசெயலாளர் யாழினி கங்கா சுதன் குறிப்பிடுகையில், மாணவரின் ஒழுக்கம் மற்றும் போதைப் பொருள் பாவனை போன்ற பிரச்சனைகளுக்கு ஆசிரியர்கள் நேரடியாக நடவடிக்கைகளை எடுக்க முற்படுகின்ற போது பல்வேறு பிரச்சனைகளுக்கும் சிரமங்களுக்கும் உள்ளாகின்றார்கள். எனவே குறித்த மாணவர்



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்

# அறிவாலயம்

அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.

## மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி வெற்றிடம்

**மேற்படி பதவிக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கல்வி மற்றும் சமூகப்பணி செய்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமாக செயற்பட்டுவரும் அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்திற்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறன.**

### எதிர்பார்க்கப்படும் தகைமைகள்

**அடிப்படை கல்வித் தகமை**

1. சா.த பரீட்சையில் ஆங்கிலத்தில் சிறந்த தேர்ச்சி உட்பட ஆறு பாடங்களில் சித்தி
2. உ.தரத்தில் ஆங்கிலம் உட்பட 3 பாடங்களில் சிறப்பு சித்தி

**ஏனைய தகைமைகள்**

1. உளவியல் அல்லது உளசமூக மேம்பாடு அல்லது சமூகவியல் கற்கைகளில் சான்றிதழ் மற்றும் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.
2. ஆங்கிலத்தில் சரளமாக தொடர்பாடலை மேற்கொள்ள கூடியவராக இருத்தல் வேண்டும்.
3. கணனியில் **NVQ** மட்டம் 4 பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் அல்லது கணனித்துறையில் 1 வருடத்திற்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
4. பயிற்சி வகுப்புகள் உள்ள தினங்களில் சனி ஞாயிறு விடுமுறை தினங்களிலும் வேலை செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்
5. வயது 25-35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
6. மோட்டார் சைக்கிள் அல்லது ஏனைய வாகன அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
7. மட்டக்களப்பு மாவட்டத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
8. மாதாந்தம் சகல படிகளுடன் 35000ரூபா சம்பளமாக வழங்கப்படும்.

*தங்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையினை* **arivalayam@hotmail.fr** *என்ற மின்னஞ்சலுக்கு எதிர்வரும் மார்கழி 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.*

**Founder**
**Arivalayam foundation trust**
**Pandariyaveli**
**Kokkaddicholai**
**Batticoloa**
**Srilanka**


## தெற்குக்குத் தேவையென்றால் மாவட்ட

மைத்திரிபாலசிறிசேனவும்தற்போதையஜனாதிபதியும் தெரிவித்த மாவட்ட அவிவிருத்தி சபை குறித்த கருத்து தொடர்பில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், இன்று காலையில் முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய ஜனாதிபதியும் இந்த சபையில் ஒட்டு மொத்த நாட்டு மக்களையும், குறிப்பாக தமிழ் மக்களையும் வேதனைப்படுத்தும் ஒரு கருத்தைப் பரிமாறிக் கொண்டார்கள். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்றுகூறியிருந்தார். தற்போதைய ஜனாதிபதி அவர்கள் கடந்த சில அமர்வுகளுக்கு முன்பு அனைவரையுமே இந்த சபையில் எழுப்பி இனப்பிரச்சினைக்கான ஒரு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு நீங்கள் எல்லாம் தயாரா என்று கேட்டது மாத்திரமல்லாமல், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களை எழுந்து 13 பிளஸ் என்று கூறுங்கள் என்று கூறிய ஜனாதிபதி மாவட்ட சபைகளைப் பற்றி பிரஸ்த்தாபித்திருப்பது மிகவும் வேதனையான விடயம்.

மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் என்றாலே எங்களுக்கு ஞாபகம் வருவது யாழ்ப்பாண நூலகத்தை எரித்த சம்பவம் தான். அந்த மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலையும் அந்த அதிகாரப்பரவலாக்கத்தையும் என்றோ இந்த நாட்டு மக்கள் நிராகரித்து விட்டார்கள்.

உங்களுக்குத் தேவையென்றால், தெற்குக்குத் தேவையென்றால் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் நிரந்தரமாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை நீங்கள் கொடுக்க வேண்டுமென்றால் இணைந்த வடகிழக்கில் முழு அதிகாரங்களையும் பரவலாக்கி ஒரு சமஸ்டி அடிப்படையிலான ஒரு தீர்வைக் கொடுத்தால்தான் இந்த நாடு எதிர்காலத்தில் ஒரு சுபீட்சமான நாடாக இருக்குமென்பதை மீண்டும் நான் வலியுறுத்துகிறேன் என்று தெரிவித்தார்.

## பலஸ்தீன் நாட்டினை இஸ்ரேவிலிடமிருந்து விடுவிப்போம்

அமீன் இஸ்ஸடீன், ஆகியோா□களும் உரையாற்றினாா□கள்.

இங்கு உரையாற்றிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினா□ ஜே.வி.பி.பி அங்கத்துவருமான விமல் ரத்னாயக்க தெரிவிக்கையில் –

1948 – 1966 வரையிலான காலப் பகுதியில் இஸ்ரேலிலிருந்த பலஸ்தீனா□களில் சுமாா□ 85 சதவீதமானனோர் வாழ்ந்த இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள மூன்று பிரதேசங்களில் ஆகும். இங்கு இராணுவ ஆட்சி 1967 இல் முடிவுற்றாலும் அதே நிலைமைக்கு சமாந்தரமான நிலைமை தற்போதும் காணப்படுகின்றது.

ஒஸ்லோ உடன்படிக்கையின் படி மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அதில் 80 சதவிதமான சீ பிரிவின் நிர்வாகம் முழுமையாக இஸ்ரேலின் கீழ் உள்ளது.

தாமதமின்றி 55 வருட காலமாக இடம்பெற்றவரும் பலஸ்தீன் மற்றும் சிரிய பிரதேசங்களின் ஆக்கிரமிப்பு முடிவுக்கு கொண்டுவரப்படல் வேண்டும்.

சர்வதேச மனித உரிமைச் சட்டத்திற்கு முழுமையாக இணங்கல் வேண்டும்.

இஸ்ரேலின் தரப்பில் தொடா□ந்து நிரகாரிப்பது தொடா□பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடா□பாக உடனடியாக சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனைப்படி கருத்து பெறப்படல் வேண்டும். என உரையாற்றினாா□

உபதலைவரும் சன்டே டைம்ஸ் சிரேஸ்ட ஊடகவியலாளருமான அமீன் இஸ்சடீன் – இலங்கை பலஸ்தீன் ஒருமைப்பாட்டுக்குழு பின்வரும் தீர்மாணங்களை முன்மொழிந்து ஜக்கிய நாடுகள் வதிவிடப்பிரநிதியிடம் கையளிக்கப்பட்டது. அவ் மும்மொழிகளாவன–

காலனித்துவத்தை அதன் அனைத்து வெளிபாடுகளிலும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் ஆக்கிரமிப்பின் கீழ் வாழும் மக்களின் சுதந்திரப் போரட்டத்திற்கு ஆதரவளிப்பதற்குமான தார்மீகப் பொறுப்பை இலங்கைக்கு மக்களுக்கும் பரந்த சர்வதேச சமுகத்திற்கும் நினைவூட்டுதல்.

பலஸ்தீன் மக்களின் சுதந்திரத்திற்கான தீவிர ஏக்கத்தை மற்றும் அவா□கள் சுதந்திரத்திற்காக போரடுவதற்கான உரிமையை அங்கீகரித்தல்.

ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள பலஸ்தீன் மக்களின் சுதந்திரப் போராட்டங்களை சர்வதேச சட்டம் அங்கீகரிப்பதைக் குறிப்பிடுதல்.

பலஸ்தீனில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தும், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இஸ்ரேலை வெளிறுமாறும்,இஸ்ரேலின் குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்தும் ஆதரவாக 185க்கும் மேற்பட்ட தீர்மானங்களை ஜக்கிய நாடுகள் சபை நிறைவேற்றியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது

1917ஆம் ஆண்டின் மிகவும் கண்டிக்கத்தக்க பால்போர் பிரகடனத்தின் மூலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளால் கைப்பற்றப்பட்ட பலஸ்தீனத்தின் ஓட்டோமன் பிரதேசத்தில் இஸ்ரேல் ஒரு சட்ட விரோத நிறுவனம் என்பதனை மீண்டும் உறுதிபடுத்துதல்.

இஸ்ரேலிய போா□க்குற்றங்கள் தொடா□பான பல்வேறு ஜக்கிய நாடுகளின் ஆணைக்குழு கண்டுபிடிப்புக்களை ஆமோதிப்பதோடு குறிப்பாக கிழக்கு ஜெருசலமே மற்றும் இஸ்ரேல் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிரதேசத்தில் ஜக்கிகய நாடுகளின் சுதந்திர சர்வதேச விசாரணை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அக்டோபா□ 20.2022 அறிக்கை ஏற்றுக் கொள்ளுதல்.

பலஸ்தீனுடான ஒருமைப்பாட்டுக்கான இலங்கைக்குழுவின் சில தீர்மாணங்கள்......

ஐ.நா.தீர்மானங்களைத் தொடா□ந்து மீறும் இஸ்ரேல் மீது சர்வதேச சமூகம் கடுமையான தடைகளை விதிக்கத் தவறியது. குறித்து அதனது கவலையை வெளிப்படுத்துகிறது.

பலஸ்தீன் மீதான அதன் ஆக்கிரமிப்பு அடக்குமுறைக் கொள்கைகள் மற்றும் மனித உரிமை மீறல்களை முடிவுக்கு கொண்டுவர இஸ்ரேலை நிர்பந்திக்க உலக சமூகம் தண்டனை வழங்கும் நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்துகிறது.

இலங்கை அரசாங்கம் அதன் முன்முயற்சி மற்றும் முற்போக்கான அணிசேரா கொள்கைக்கு இணங்க பலஸ்தீன பிரச்சினைக்கு தனது ஆதரவை ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கின்றது.

இவ் தீர்மாணங்கள் இன்று பி.ஜ.எம்.சி.எச்சில் நடைபெற்ற பலஸ்தீன் மக்களுடனான சர்வதேச ஒருமைப்பாட்டு தினத்தினை சமுகமளித்தவா□கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## தேசியத்தில் 100 வலயங்களில் மட்டக்களப்பு வலயம் முதலிடம்

இரண்டாம் இடத்தையும் ஹம்பாந்தோட்டை மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளது.
வலயங்களைப் பொறுத்தவரை மட்டக்களப்பு வலயம் முதலிடத்தையும் கண்டி வலயம் இரண்டாம் இடத்தையும் வலஸ்முல்ல வலயம் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளது.




# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி
இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25096 | வே | 1984**
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

**21276 | வே | 1993**
புத்தூர் | இந்து | B.Eng
Engineer
பூராடம் (தனுசு)
172 செ.மீ | செவ்: 02

**23671 | வே | 1991**
குரும்பசிட்டி | இந்து | B.Com
Jr.Executive @ Bank
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**25090 | வே | 1990**
நயினாதீவு | இந்து | Diploma
Branch in charge
அஸ்வினி (மேடம்)
167 செ.மீ | செவ்: 04

**21372 | வே | 1988**
உரும்பிராய் | இந்து | MBA
Sr.Finance Executive
அஸ்வினி (மேடம்)
180 செ.மீ | செவ்: 12

**21297 | வே | 1987**
அரசடி | இந்து | AAT
Managing Partner
உத்தரம் (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 12

**25081 | பி | 1986**
தெஹிவளை | இந்து | MD
Investigation Officer
பூராடம் (தனுசு)
167 செ.மீ

**20931 | வே | 1993**
கந்தர்மடம் | இந்து
MBBS | Doctor
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ

**20733 | வி | 1992**
யாழ்நகர் | இந்து | BSc
Senior QS | Qatar
கேட்டை (விருச்சிகம்)

**23788 | வே | 1995**
வேலணை | இந்து | BD
Software Engineer
சித்திரை (துலாம்)
168 செ.மீ

**20538 | வே | 1989**
காரைநகர் | இந்து | B.Eng,
MBA | Electrical Engineer
விசாகம் (துலாம்)
170 செ.மீ | சூ.செவ்: 08

**21102 | வே | 1987**
மீசாலை | இந்து | BSc
Civil Engineer
பூசம் (கடகம்)
174 செ.மீ

**25087 | வே | 1986**
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

**21321 | வே | 1993**
புங்குடுதீவு | இந்து | BSc
Tech. Support Engineer
மூலம் (தனுசு)
185 செ.மீ | சூ.செவ்: 09

**25105 | வே | 1990**
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

**20706 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | BSc
Civil Engineer | UK
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ | செவ்: 12

**25102 | வே | 1989**
வேலணை | இந்து | HND
Realtor & Insurance
Executive | பூராடம் (தனுசு)
170 செ.மீ | சூ.செவ்: 03

**20850 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | BSc
Quantity Surveyor
பூராடம் (தனுசு) | UK
182 செ.மீ

**21324 | வே | 1987**
முல்லைத்தீவு | இந்து | BBA
Development Officer
கேட்டை (விருச்சிகம்)
177 செ.மீ | செவ்: 02

**21033 | கோ | 1992**
கைதடி | இந்து | BSc
Quantity Surveyor
புனர்பூசம் (மிதுனம்) | UAE
170 செ.மீ | செவ்: 07

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25099 | வே | 1983**
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

**21510 | வே | 1996**
இணுவில் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
169 செ.மீ | India

**20874 | வே | 1994**
வேலணை | இந்து | Reading
MBA | Audit Trainee
உத்தரட்டாதி (மீனம்)
156 செ.மீ | செவ்: 02

**23638 | வே | 1993**
கொழும்பு | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சூ.செவ்: 10

**20619 | வே | 1991**
யாழ்நகர் | இந்து | ACCA
Assistant Manager
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ

**21471 | வே | 1990**
நீர்வேலி | இந்து | MD, SLAS
Assistant Director
மிருகசீரிடம் (மிதுனம்)
163 செ.மீ | செவ்: 08

**21333 | வே | 1985**
தும்பளை | இந்து | BA
Assistant | Divorced
சித்திரை (துலாம்) | UK
152 செ.மீ

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
அஸ்வினி (மேடம்) | கனடா
156 செ.மீ

**20694 | வே | 1995**
நெடுந்தீவு | இந்து
BFA | Teacher
பூராடம் (தனுசு)
153 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**20883 | வே | 1993**
வேலணை | இந்து | HNDA
Development Officer
விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ | செவ்: 07

**21444 | வே | 1991**
திருகோணமலை | இந்து
MSc | Software Engineer
பரணி (மேடம்)
153 செ.மீ | செவ்: 08

**21105 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | MD
Development Officer
பரணி (மேடம்) | Divorced
165 செ.மீ | சூ.செவ்: 07

**21300 | வே | 1989**
சுழிபுரம் | இந்து | BSc
Dental Surgeon | சைவம்
கேட்டை (விருச்சிகம்)
157 செ.மீ | சூ.செவ்: 10

**23710 | வே | 1996**
நெல்லியடி | இந்து
BSc | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சூ.செவ்: 06

**21132 | கோ | 1994**
கைதடி | இந்து | Following
B.Com | Management
Assistant | சதயம் (கும்பம்)
156 செ.மீ | செவ்: 02
Divorced

**23749 | வே | 1993**
வவுனியா | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | Norway
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சூ.செவ்: 06

**23821 | வே | 1998**
வவுனியா | இந்து
A/L | Accountant
பூரம் (சிம்மம்)
154 செ.மீ | செவ்: 07

**20853 | கோ | 1999**
சுன்னாகம் | இந்து
A/L | Accountant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 08

## அருந்ததி பிரைவட் லிமிட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# கந்தளாய் சீனிபுர விவசாயிகள் விவசாயத்துக்கான நீரினை திறந்துதருமாறு கோரி கவனயீர்ப்பு



**எப்.முபாரக்**

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் நீர்பாசனபொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட சீனி புர பகுதியில் பெரும்போக வேளாண்மை மழையின்றி வரட்சியால் சாகும் நிலையில் கவலை அடைந்த விவசாயிகள் இன்று (30 ) கந்தளாய் பிரதேச செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். இவ்வார்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டதோடு, விவசாயத்துக்கு தேவையான நீரினை திறந்து விடுமாறு கோரிக்கை விடுத்தனர். இவை தொடர்பாக விவசாயிகள் தெரிவிக்கையில்:-

வயல் விதைத்து பதினைந்து இருபது நாளாகின்றது இதுவரைக்கும் மழையும் இல்லை நீரும் திறந்து தரப்படவில்லையெனினும் வறட்சி மீண்டும் தொடருமானால் எங்கள் பணம் மண்ணோடு மண்ணாகிவிடும் எனவும் தெரிவித்தார் .

இதன் போது ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் விவசாயத்தை வளப்படுத்து,நீரை திறந்து விடு,பசளையை வழங்கு,போன்ற சுவரொட்டிகளையும் ஏந்தியிருந்தார்கள்.

இது குறித்து விவசாயிகள் கந்தளாய் குளத்தின் நீரைதிறந்து தருமாறு கந்தளாய் பிரதேச உப செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

# மட்டக்களப்பில் நடைபெற்ற சமாதான மாநாடு



**(ரக்ஸனா)**

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட மதத் தலைவர்கள், இளைஞர் யுவதிகளுக்கு சமாதானம் தொடர்பான மாநாடு ஒன்று மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் புதன்கிழமை(30) நடைபெற்றது. இதன்போது திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் பொலன்நறுவை, மாவட்டங்களிலுள்ள, இந்து, கிறிஸ்த்தவம், இஸ்லாம்,மற்றும்பௌத்தமதத்தலைவர்கள், தமிழ், முஸ்லிம், மற்றும் சிங்கள இளைஞர் யுவதிகள், உள்ளடங்கலாக சுமார் 100 பேர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

காலையில் மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து மாநாடு நடைபெறும் விடுதி வரைக்கும் சமாதானத்தை முன்நிறுத்தி நடைபவனி ஒன்று இடம்பெற்று, பின்னர் சமாதானம் தொடர்பான கருத்துக்களைத் தெரிவிக்கும் மாநாடு இடம்பெற்றது. இதன்போது இன, மத சகவாழ்வு, மற்றும் பொருளாதார வளர்ச்சி, தொடர்பிலும், கலந்து கொண்ட அனைத்து இளைஞர் யுவதிகள், மற்றும் மதத் தலைவர்களின் கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன், மனித உரிமை ஆர்வலர் அருண் சிவஞானம், மற்றும் தேசிய சமாதானப் பேரவையின் உதவித்திட்ட முகாமையாளர் ரசிக்க செனவிரத்ன ஆகியோர் வளவாளராகக் கலந்து கொண்டு விளக்கங்களை வளங்கினர்.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் இ.மனோகரன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், திட்ட அதிகாரி என்.பாஸ்தேவன், திட்ட முகாமையாளர் சமன் செனவிரெட்ண, திட்ட உதவி முகாமையாளர் ரஷிகா செனவிரெட்ண, திட்ட அலுவலர் ஜசானியா ஜயரத்ன, தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட சர்வமத றேணுகா ரத்னாயக்க, சனம் டில்ஷான் உள்ளிட்ட பலரும் இதன்போது கொண்டிருந்தனர்.

# கல்வியிலும் விளையாட்டிலும் சாதனை படைத்த புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவர்கள் கௌரவிப்பு



**(வாஸ் கூஞ்ஞ)**

அன்மையில் வெளியான கல்வி பொது தராதர சாதாரணப் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் 39 மாணவர்கள் 9ஏ பெற்றுள்ளனர். இவர்களில் 30 மாணவிகளும் 9 மாணவருமே இவ் சித்தியை பெற்றுள்ளனர். இவ் சித்தியில் 9 ஆண்களில் 7 மாணவர் புனித சவேரியார் ஆண்கள் பாடசாலையிலிருந்து சித்தியடைந்துள்ளனர்.

இவர்களையும் மற்றும் அன்மையில் இவ் பாடசாலையிலிருந்து உதைபந்தாட்டப் போட்டியில் தேசிய மட்டத்தில் விளையாடி இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்ட மாணவர்களான உதைபந்தாட்ட வீரர்களையும் இவ் வருடம் மன்னார் மாவட்டம் சார்பாக தேசிய மட்டத்தில் விளையாடி 17 வயதுக்கு உட்பட்ட வீரர்கள் 3வது இடத்தையும் 17 வயதுக்கு மேற்பட்ட அணியினர் 2வது இடத்தையும் பெற்றுள்ள விருர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய் கிழமை (29) இடம்பெற்றது.

கல்வியிலும் விளையாட்டிலும் அன்மையில் சிறந்து விளங்கிய மாணவர்களையும் அவர்களின் பெற்றோரையும்பயிற்றுவிப்பாளர்களையும் மாலைகள் இட்டு மன்னார் நகரிலிருந்து ஊர்வலமாக அழைத்துச் சென்றபோது

மன்னார் மாவட்ட செயலகத்தக்கு முன்னால் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் மாவட்ட செயலக அதிகாரிகள் ஊழியர்கள் மாவட்டத்துக்கு பெருமையீட்டி தந்தமைக்காக அங்கும் கௌரவிக்கப்பட்டு அன்பளிப்பகளும் வழங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து இவர்கள் கல்லூரிக்கு பேண்ட் இசையுடன் அழைத்துச் செல்லப்பட்டு அங்கும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.ஈ.றெஜினோலட் (டிலாசால் சபை) தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

இவ் நிகழ்வுக்கு விஷேட விருந்தினர்களாக சூடான் நாட்டு பாடசாலை அதிபர் அருட்சகோதரர் யூஸ்தஸ் அமரஜோதி (டிலாசால் சபை) மன்னார் பேராலய பரிபாலகர் அருட்திரு இ.அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளார் , திட்டமிடல் பிரதி கல்விப் பணிப்பாளர் அ.பிரேமதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் காணி தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல்

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பதிநான்கு பிரதேச செயலகங்களில் பணியாற்றும் பிரதேச செயலாளர்கள் உதவி பிரதேச செயலாளர்கள் காணி வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான விழிப்புனர்வு பயிற்சி கருத்தரங்கு இன்று (30) காலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காணிதொடர்பான புதிய நடைமுறைகள் மற்றும் அரச காணி தொடர்பான சட்டங்கள் மற்றும் சுற்று நிருபங்களின் அடிப்படையில் எவ்வாறு மக்களுக்கு வழிகாட்டல்களை தெளிவு படும்துவது காலத்திற்கு காலம் மாற்றியமைக்கப்டுகின்ற சட்டங்களையும் சுற்றுநிருபங்களையும் பின்பற்றி பணியினை ஆற்றுவது தொடர்பான கருத்துக்கள் வளவாளர்களினால் வளவான்மை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. அரச காணி குத்தகை நடைமுறைகள் மற்றும் காணியற்றவர்களுக்கான காணி வழங்கல் நடைமுறைகள் பற்றிய விளக்கங்களும் சிறிய நடுத்தர பெரிய அளவிலான விவசாய மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான காணிகள் வழங்களில் நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு அப்பால் புதியநடைமுறைகளும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விடையங்களும் கலந்துரையாடப்பட்டது.

இன் நிகழ்விற்கு வளவாளராக திருமதி கே.பி.ரி.பிறேமதாச காணி ஆணையாளர் மற்றும் ஏ.எச்.எம்.அன்சார் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கிழக்கு மாகாண காணி திணைக்களத்தின் உதவி காணி ஆணையாளர் பு.ரவிராஜன் மட்டக்களப்பு காணி பிரிவின் காணி தலைமை உத்தியோகத்தர் திருமதி குகதா ஈஸ்வரன் செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு



**எம்.எம்.நௌபீக்**

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் “பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்போம் 16 நாள் விசேட வேலைத்திட்டத்தின்” கீழ் மூதூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் 35 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு புற்றுநோய் மற்றும் நோய் மாதிரிகள் பெறுதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு (29) தோப்பூர் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது. இவ்விழிப்புணர்வு நிகழ்வில் 80 இற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டதோடு மார்பக புற்றுநோய் மற்றும் கருப்பை கழுத்து புற்றுநோய் தொடர்பான நோய் மாதிரிகள் 50 பெண்களிடம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வில் மூதூர் சுகாதார வைத்தியதிகாரி அலுவலக வைத்தியர்கள் மற்றும் தோப்பூர் பிரதேச வைத்தியசாலை வைத்தியர்கள் வளவாளராக பங்குபற்றியிருந்தமை விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலக பெண்கள் மற்றும் மகளிர் பிரிவு ஊழியர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பராசக்தி பாடசாலையில் பனை மரநடுகை திட்டம்

**ஹஸ்பர்⁶**

திருகோணமலை கல்வி வலயத்திற்குட்பட்ட பாரதிபுரம் பராசக்தி வித்தியாலய வளாகத்தில் பனை மரங்கள் நடும் திட்டம் (29)இடம் பெற்றது. பனை அபிவிருத்தி அதிகார சபை மூலமாக இத் திட்டம் இடம் பெற்றுவருகின்றன. இயற்கை வளங்களை பேணி பாதுகாப்பதன் மூலமாகவும் மரங்களை வளர்ப்பதன் ஊடாகவும் நமது சந்ததிகளின் மற்றும் ஆரோக்கியமான வாழ்வுக்கும் வழி வகுக்கும் என தம்பலகாமம் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

இம் மரநடுகை நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச சபையின் உப தவிசாளர் குமார் மற்றும் பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் உட்பட பொது மக்கள்,ஆசிரியர்கள்,பனை அபிவிருத்தி சபை உத்தியோகத்தர் என பலர் கலந்து கொண்டனர்.

# அறுவடை விழாவும், சான்றிதழ் வழங்கி கௌரவிப்பும்



**எப்.முபாரக்**

அரசாங்கத்தின் வயற் பாடசாலை திட்டத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட சேதன வீட்டுத் தோட்ட அறுவடை விழாவும், வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் செவ்வாய்கிழமை(29) மூதூர் – இத்திக்குளம் பகுதியில் இடம்பெற்றது. இதன்போது சேதனப் பசளை மூலம் செய்கைபண்ணப்பட்ட பயிற்றை, கொச்சி,வெண்டி,பீக்கை போன்ற வீட்டுத்தோட்ட காய்கறிகள் அறுவடை செய்யப்பட்டன. இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம். குஸைன் கலந்து சிறப்பித்தார். ஏனைய அதிதிகளாக உதவி விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.இம்தியாஸ் அஹமட், பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.சிவசங்கர்,விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், என பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# நிந்தவூரில் உலக அறிவிப்பாளர் ஹமீத் கலந்து கொள்ளும் வழிகாட்டல் மாநாடு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

இளைய தலைமுறையினருக்காக ஏற்பாடு செய்யப்பட்ட வழிகாட்டல் மாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் (03) ஆம் திகதி சனிக்கிழமை காலை 8:30 தொடக்கம் நிந்தவூர் அல் – அஷ்ரக் தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலை அதிபர் ஏ. அப்துல் கபூரின் பங்களிப்புடன் இடம்பெறும் இவ்விழாவில், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி என். புள்ளை நாயகம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

அஸ்ஸெய்யத் றஸ்மி மௌலானாவின் ஒருங்கமைப்பில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹதுல் நஜீமின் தலைமையில் இடம்பெறுகின்ற இந்நிகழ்வில், தமிழ்கூறு நல்லுலகில் அன்புக்குரிய ஒலிபரப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத் பிரதம அதிதியாகவும் பிரதம பேச்சாளராகவும் கலந்து கொள்கிறார். அதிதிகளுடன் கலந்து சிறப்பிக்கும் இளைய தலைமுறையினருக்கான இந்த மாபெரும் மாநாடுக்கு விரும்பியவர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டுக் குழுவினர் திறந்த அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நிகழ்வின் நேரடி ஒலிபரப்பு அன்றைய தினம் காலை 10 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எப்.எம். அலைவரிசையில் ஒலிபரப்பாகும்.

# களுவாஞ்சிகுடி பிரதேச செயலகப் பிரிவில் டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம்



**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் டெங்கு ஒழிப்பு சிரமதான வேலைத்திட்டம் பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலிலும் உதவி பிரதேச செயலாளர் திருமதி. சத்தியகௌரி தரணிதரன் அவர்களின் நெறிப்படுத்தலிலும் செவ்வாய்க்கிழமை(29) 45 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் நடைபெற்றது. சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் கே.உதயகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்வேலைத்திட்டத்தில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி. புவனேஸ்வரி ஜீவகுமார், கருத்திட்ட முகாமையாளர் திருமதி.சோ. தமிழ்வாணி, மாங்காடு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ஆனந்தமோகன், ,எருவில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் பா.துரைராசசிங்கம், கல்லாறு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ். ரவிந்திரன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலயங்கள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள், மயானங்கள் ஆகியன இதன்போது சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டதுடன், பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் அகற்றப்பட்டதுடன் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்பட்ட இடங்களும் முற்றுமுழுதாக சுத்தம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# வீதியோரத்தில் மீன் வியாபாரம் செய்ததை தடுத்தமைக்கு வியாபாரிகள் எதிர்ப்பு



**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட வீதியேரங்களில் இதுவரை காலமும் மீன் வியாபாரிகள் மீன் விற்பனை செய்து வருகின்றனர். இந்நிலையில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை(27) வீதியோரத்தில் மீன் விற்பனை செய்வதை நிறுத்துமாறு பொது அறிவித்தல் ஒன்றை ஒலிபெருக்கி மூலம் விடுத்துள்ளது.

இந்நிலையில் பிரதேச சபைக்குபட்பட்ட பொதுச் சந்தைகளில் காலை முதல் நண்பகல் வேளை வரையில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டு விட்டு, மாலை 2 மணிக்குப் பிற்பாடுதான் தாம் இதுவரையில் வீதியோரங்களில் மீன் விற்பனையில் ஈடுபட்டு வருவதாகவும், பிரதேச சபையின் இந்நடவடிக்கை தமது வாழ்வாதாரத்திற்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், தெரிவித்து செவ்வாய்க்கிழமை(29) அப்பகுதியிலுள்ள மீன் வியாபாரிகள், மீன் பெட்டிகளுடன் களுதாவளையில் அமைந்துள்ள மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் முன்னால் எதிர்ப்பு நடவடிகையில் ஈடுபட்டனர்.

பொதுச் சந்தைகளில் வியாபாரத்தில் ஈடுபடும் மீன் வியாபாரிகள் மாலை 2 மணிக்குப் பின்னர் வீதியோரங்களில் மீன் வியாபாரத்தில் ஈடுபடலாம் என்ற சபைத் தீர்மானத்தை தாம் ஏற்கனவே எடுத்துள்ளதாகவும், பிரதேச சபை அதிகாரிகளின் இந்நடவடிக்கை ஏற்றுக்கொள்ள முடியாது என இதன்போது வருகை தந்த குறித்த பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ் தெரிவித்தார்.

எனினும் தமது மேலிடத்து அதிகாரிகளின் உத்தரவின் பெயரில் வீதியோரங்களில் மேற்கொள்ளப்படும் மீன் வியாபாரங்களைத் தடை செய்துள்ளதாக இதன்போது வருகை தந்து மீன் வியாபாரிகளிடம் தெரிவித்தார் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.அறிவழகன் தெரிவித்தார்.

பிரதேச சபையின் உறுப்பினர் மே.வினேதராஜ் தெரிவிக்கின்றார், நாம் 2 மணிக்குப் பின்னர் வீதியோரத்தில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்குரிய அனுமதி வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகத் தெரிவிக்கின்றார். மாறாக பிரதேச சபையின் செயலாளர் தெரிவிக்கின்றார் முற்றாக வீதியோர மீன் வியாபாரம் தடை செய்யப்பட்டுள்ளதாக கூறுகின்றார். ஒரு சபையிலே இரு மாறுபட்ட கருத்துக்கள் உள்ளதாகவும், பொதுச் சந்தையில் மீன் வியாபாரத்தில், ஈடுபடும்போது தாம் செலுத்தும் வரிகளுக்கு இதுவரையில் பற்றுச்சீட்டு வழங்குவதில்லை, காலையில் பிடிக்கப்படும் மீன் மதியம் வரை விற்று விட முடியாது, அதனை மாலையிலும் விற்றால்தான் எமது வாழ்வாதாரம் பாதிக்காது, இல்லையேல் மற்று நாள் மீனை வைத்திருந்தால் அவை அழுகிவிடுகின்றன, இதனால் நாம் அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்யும் மீன்களை மறுநாள் கொட்டிவிட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவும், மீன் வியாபாரிகள் இதன்போது தெரிவித்தனர். இது இவ்வாறு இருக்ககுறித்த இடத்திற்கு வருகை தந்த களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபஜவிக்கிரம மீன் வியாபரிகளிடம் கலந்துரையாடினார் மீன் வியாபாரிகள் அனைவரையும் பொலிசில் முறைப்பாடு செய்யுமாறு தெரிவித்தார். எனினும் தாம் பொலிசில் முறைப்பாடு செய்துவிட்டு எந்த நடவடிக்கை வந்தாலும் தாம் எதிர்கொள்ளத் தயார் என கூறிவிட்டு மீன் வியாபாரிகள் மீண்டும் வீதியோரங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்து அதிலிருந்து மீன்வியாபாரிகள் கலைந்து சென்றனர்.

பின்னர் குறித்த மீன் வியாபாரிகள் செவ்வாய்கிழமை மாலை வரையும் வீதியோரங்களில் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# ஆளுமைவிருத்தி தொடர்பான நாடக வெளியீட்டு விழாவும் விருது வழங்கி வைப்பும்





**அபுஅலா –**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இளைஞர் அபிவிருத்தி "அகம்" இணைந்து நடாத்தியமா பெரும் சமூக விழிப்புணர்வு குறும்படம் மற்றும் இளைஞர்களின் ஆளுமைவிருத்தி தொடர்பான நாடக வெளியீட்டு விழா நேற்று மாலை (29) உவர் மலை விவேகானந்தா கல்லூரி கலையரங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இளைஞர் அபிவிருத்தி "அகம்" இணைப்பாளர் பொன் சற்சிவானந்தம் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ விருந்தினர்களாக திருகோணமலை ஸ்ரீ சன்முகா இந்து மகளிர் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி சுலோசனா ஜெயபாலன், பட்டைய முகாமைக் கணக்காளர் கலாநிதி இ.ஸ்ரீஞானேஸ்வரன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக குறும்படத் தயாரிப்பாளர் இயக்குனர் வடமலை ராஜ்குமார், உள்ளூராட்சி திணைக்களத்தின் சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் சி.சர்வேஸ்வரன், உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் அதிபர் க.ரவிதாஸ், கிளிவெட்டி மகா வித்தியாலய அதிபர் ப.கோணேஸ்வரராஜா, இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளர் எஸ்.ரவிக்குமார், மாவட்ட செயலக மாவட்ட சமூகவேவை அதிகாரி தவராஜா பிரணவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில், மனிதி, வீழ்வேனென்று, அடையல், அறுவதை, வெற்றிக்கதை, பள்ளிக்கூடம் என்ற குறும்படங்களும், தலைமகள் என்ற நாடகமும் அரங்கேற்றப்பட்டது. இதில் மதனி என்ற குறும்படம் முதலாம் இடத்தினையும், வீழ்வேனென்று என்ற குறும்படம் இரண்டாம் இடத்தினையும், பள்ளிக்கூடம் என்ற குறும்படம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது.

சிறந்த திரைக்கதை மற்றும் சிறந்த நடிகருக்கான விருதினை வெற்றிக்கதை குறும்படத்தின் மோகேந்திரன் சாந்தகோபு, வி.கிருபானந்தம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். சிறந்த இயக்கம் மற்றும் தயாரிப்புக்கான விருதினை மனிதி குறும்படத்தின் விநாயகமூர்த்தி அபிவர்ஷன் பெற்றுக்கொண்டார். சிறந்த நடிகைக்கான விருதை மனிதி குறும்படத்தின் ஜே.செலினி பெற்றுக்கொண்டார்.

சிறந்த இசை மற்றும் சிறந்த படத்தொகுப்புக்கான விருதினை வீழ்வேனென்று குறும்படத்தின் ஜே.சமீல், ஜே.டி.கொட்வின் செல்லர் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதையும், சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான விருதையும் பள்ளிக்கூடம் குறும்படத்தின் விவேக்ஷன் மனோகரனும், கோ.கம்ஸத்வேனியும் பெற்றுக்கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள இளைஞர்களின் ஆளுமைகளை டிஜிட்டல் யுகத்தில் பயனுள்ளதாக ஆக்கும் நோக்கிலும், இளைஞர்களுக்கு பயனுள்ள தகவல்களை நம்பிக்கையூட்டும் வகையில் கொண்டு செல்வதற்கும், உரிமை சார் கருத்துக்களை விழிப்புணர்வு செய்வதற்கும் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட குறும்படம் மற்றும் நாடக வெளியிடலில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கான விருது, சான்றிதழ்களை இன்றைய அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி பிரதேச சபை வரவு செலவு திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் 56 ஆவது சபை அமர்வும் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவும் செவ்வாய்க்கிழமை (29) சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தலைமையில் இடம்பெற்ற இவ் வரவு செலவு திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

18 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் 15 உறுப்பினர்கள் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவு வழங்கியதாகவும், அதில் ஒரு உறுப்பினர் சபைக்கு சமூகமளிக்காத போதும் எழுத்து மூலமும், தொலைபேசி ஊடாகவும் ஆதரவு வழங்கியதாக தவிசாளர் ஏ.எம். நௌபர் தெரிவித்தார். அத்துடன், இரண்டு உறுப்பினர்கள் வரவு செலவு திட்டத்திற்கு எதிர்த்து வாக்களித்துள்ளதுடன், மற்றுமொரு உறுப்பினர் அமர்வில் கலந்து கொள்ளவில்லை என்றும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# கல்முனை வடக்கில் வர்த்தக மற்றும் விற்பனை கண்காட்சி



(ஏ.எல்.எம்.ஷினாஸ், பி.எம்.எம்.ஏ.காதர்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த 'சுயமாக முன்னேறும் மனிதர்கள்' எனும் தொனிப்பொருளிலான திகாமடுல்ல முயற்சியாண்மை வர்த்தக மற்றும் விற்பனை கண்காட்சி பிரதேச செயலாளர் ரி. ஜெ. அதிசயராஜ் தலைமையில் இன்று (30.11.2022) இடம்பெற்றது. இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் அனுசரணையோடு நடைபெற்ற இந்த வர்த்தக கண்காட்சியில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 29 கிராம சேவையாளர் பிரிவிலுமுள்ள சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்தி பொருட்களை விற்பனை கூடாரங்கள் அமைத்து காட்சிப்படுத்தியிருந்தனர்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கண்காட்சியை திறந்து வைத்தார். இதில் அம்பாறை மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவி பணிப்பாளர் எம்.ஐ .நாசர், கல்முனை தபால் நிலையத்தின் பிரதம தபால் அதிகாரி பி.எம்.அஸ்ஹர்டீன், கல்முனை வடக்கு நிருவாக உத்தியோகத்தர் எம்.ஜீவராஜ், சமூர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எஸ்.இருதயராஜா, அம்பாறை மாவட்ட செயலகத்தின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி வியாபார பிரிவு உத்தியோகத்தர் றஜாத், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ. றமீஸ், எஸ்.யதக்சினி, உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட வேண்டும்




ஹஸ்பர்

. திருகோணமலை மாவட்டத்தில் ஒரு பொது வைத்தியசாலையும் 'யு' தரத்திலான நான்கு தள வைத்தியசாலையும் ஏனைய வைத்தியசாலைகளும் காணப்படுகின்றன. கிண்ணியா, மூதூர், புல்மோட்டை வைத்தியசாலைகள் கடந்த காலங்களில் தரமுயர்த்தப்பட்டாலும் தேவையான போதுமான வசதிகள் தற்போது குறைவாகவே காணப்படுகின்றது பொறுப்பான அமைச்சர் அதற்கான வசதிகளை பெற்றுத்தருவதை உறுதிப்படுத்தவேண்டும் என சுகாதார அமைச்சு சம்பந்தமான குழுநிலை விவாதத்தில் பாராளுமன்றில் உரையாற்றும் போது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், கிண்ணியா வைத்தியசாலை தற்போது இட பற்றாக்குறையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது, அங்கு ஓ–சுயல இயந்திரம் கிடைக்கப்பெற்ற போதிலும் ஓ–சுயல பிரிவினை ஆரம்பிக்கமுடியாத நிலை காணப்படுகிறது. இதனால் அங்கு வருகின்ற நோயாளிகள் பல கிலோமீட்டர் சென்று சிகிச்சைபெறவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இதனால் அரசாங்கம் அவசரமாக ஓ–சுயல பிரிவினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும்,

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவகம் அதிகூடிய சனத்தையும் பிரதேசத்தையும் கொண்டுகாணப்படுகின்றமையால் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினை தோப்பூர் பிரதேசத்தை மையமாக கொண்டு புதிய அலுவலகம் அமைக்கவேண்டும் என்பதுடன் குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தற்காலிக கட்டத்தில் காணப்படுவதால் அதற்கான நிரந்தர கட்டிடத்தையும் அதற்கான வாகன வசதிகளையும் ஏற்படுத்தித்தருமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் அவர் கூறுகையில், திருமலை மாவட்டத்தில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறார்கள். தற்போது சிறுவயதினர் உட்பட புற்று நோயாளர்கள் மரணம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு காரணம் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற தொலைத்தொடர்பு கோபுரங்களா? என்று மக்கள் சந்தேகின்றனர். திருமலை மாவட்டத்தில் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதற்கான காரணம் என்னவென்பதை கண்டறிய விஷேட குழுவென்றினை அமைக்குமாறு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார்.



# பாடசாலை மாணவர்கள் கடத்த முயற்சித்த சம்பவம் அடையாள அணிவகுப்பில் வசமாக மாட்டினார் மர்ம நபர்

**பாறுக் ஷிஹான்**

பாடசாலை மாணவர்களை கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் அடையாளம் காணப்பட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் உத்தரவிட்டார். அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரபல பாடசாலை மாணவர்களான 11 வயது மதிக்கத்தக்க இருவரை இரு வேறு சந்தரப்பங்களில் முகமூடி அணிந்த மர்ம நபர்கள் கடத்த முயற்சிப்பதாக பொலிஸ் நிலையத்தில் இம்மாதம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இதனை அடுத்து சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்த அதிரடி நடவடிக்கையின் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அத்துடன் குறித்த கடத்தல் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளில் உள்ள சிசிடிவி கமராக்களின் உதவிகள் மற்றும் புலன் விசாரணை முடக்கி விடப்பட்ட நிலையில் மாணவர்களை கடத்த முயற்சித்த சந்தேக நபர் கைதாகியுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் கல்முனை பகுதியை சேர்ந்த 27 வயதுடையவராவார். இச்சம்பவமானது தலைக்கவசம் மற்றும் முகக்கவசம் ஆகியவற்றுடன் முகங்களை மூடியவாறு மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேக நபர்கள் மாணவர்கள் சிலரை இலக்கு வைத இவ்வாறான கடத்த முயற்சியில் ஈடுபட்டனர் என தெரிவிக்கப்பட்டு கடந்த வாரம் பல முறைப்பாடுகள் பதிவுசெய்யட்டிருந்ததுடன் சாய்ந்தமருது பொலிஸாரும் விசாரணையினை முடக்கி விட்டிருந்தனர்.

இதற்கமைய பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட இவ்விசாரணையின் போது பாடசாலை மாணவர்களை கடத்த முயற்சித்த சம்பவத்துடன் தொடர்பு பட்ட சந்தேக நபர் கைது செய்யப்படடதுடன் நேற்று(29) செவ்வாய்க்கிழமை கல்முனை நீதவான் முன்னிலையில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டார். இவ்வடையாள அணிவகுப்பின் போது அச்சந்தேக நபரை பாதிக்கப்பட்ட மாணவன் அடையாளப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.இதனையடுத்து குறித்த சந்தேகநபரை எதிர்வரும் டிசம்பர் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.




# இன்று காரைதீவு 12 இல் திடீர் டெங்கு களப் பரிசோதனை 16 வீடுகளுக்கு றெட் நோட்டீஸ்



**( வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லீமா வசீர் தலைமையில் காரைதீவு 12 மற்றும் மாளிகைக்காடு பிரதேசத்தில் விசேட டெங்கு கள பரிசோதனை நேற்று (29) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நேற்று மட்டும் 469 வீடுகள் பரிசோதனை செய்யப்பட்டன. டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை வைத்திருந்த 16 வீடுகளுக்கு சிவப்பு அறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளது.

இப் பரிசோதனை யில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நுளம்பு கள தடுப்பு பிரிவினர்கள், காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,பு,நுனுழு,ளுனுழு, போலீஸ் உத்தியோகத்தர்களும்,பொதுமக்களும் இணைந்து டெங்கு தள தடுப்பு பரிசோதனையில் கலந்து கொண்டார்கள்.

# சுய தொழிலுக்கு ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியான உபகரண உதவி



தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் சிரமப்படும் இல்லாத இயலாத ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வாதார வாழ்வாதார உதவி வழங்கும் திட்டத்திற்கு அமைவாக உதவி வருவதாக ஏறாவூர் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் எம்.எல். செய்யது அஹமத் தெரிவித்தார்.

இதனடிப்படையில் பயனாளிகளாக அடையாளம் காணப்பட்ட பரம ஏழைக் குடும்பத்தில் கணவனால் கைவிடப்பட்ட இளம் பெண்ணுக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான தையல் இயந்திரமும் உபகரணங்களும் துணிகளும் வழங்கி வைக்கப்பட்டன. ஏறாவூர் மீராகேணி கிராமத்தில் புதனன்று 30.11.2022 நிகழ்வு இடம்பெற்றது

நிகழ்வில் தையல் இயந்திர உபகரணத் தொகுதியை வழங்கி வைத்து உரையாற்றிய ஏறாவூர் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் செய்யது அஹமத், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகளவான மக்கள் தமது தொழில்களை இழந்து நாளாந்த வருமானத்தை இழந்து ஜீவனோபாயத்திற்கு வழியின்றி தமது ஒருவேளை உணவுக்குக் கூட சிரமப்படுவதை அவதானிக்க முடிகிறது. இந்நிலையில் எமது அமைப்பு கொடையாளிகளினதும் பரோபகாரிகளினதும் உதவியைக் கொண்டு கடந்த ஒரு வருட காலப் பகுதியில் வீடு உட்பட சுமார் 63 இலட்ச ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகளையும் உணவு நிவாரணங்களையும் வழங்கியுள்ளது." என்றார்.

ஏறாவூர் மீராகேணி கிராமத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.ஏ.சி.எம் நஜிமுதீன் மேற்படி ஒன்றியத்தின் உப தலைவர் எம்.எம். அஜ்வத், இணைப்பாளர் எஸ்.எம்.எம். ஹனீபா, அதன் தொண்டர் சேவைப் பணியாளர்கள், உட்பட இன்னும் பல சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

# அவுஸ்திரேலியா தூதரக குழு மட்டக்களப்புக்கு விஜயம்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

அவுஸ்திரேலியா தூதரகத்தைச் சேர்ந்த சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சகர், மற்றும் தூதரக அதிகாரிகள் குழு நேற்று மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு வருகை தந்து சட்டவிரோத புலம் பெயர்வு தொடர்பான விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்லும் நபர்கள் தொடர்பில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டு கலந்துரையாடியுள்ளனர்.

அதன்பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட சில ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு ஒன்றினை ஏற்படுத்தி சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா செல்லும் நபர்கள் தொடர்பிலும், அது தொடர்பில் ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பிலும், சட்ட விரோதமாக செல்லும் நபர்களின் நடைமுறைகள் எவ்வாறு ஆவுஸ்திரேலியா அரசாங்கத்தினால் கையாளப்படும் என்பது தொடர்பிலும் கலந்துரையாடினர்.

இதன் போது இலங்கைக்கான அவுஸ்திரேலிய சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சகர் சுழடிநசவ *Wilson> Media officer Michael Ryan> Civilization officer Mathews Fallen>* மட்டக்களப்பு மாவட்டக சிரேஸ்ட் பொலிஸ் அத்தியட்சகர் சுகதபால, மட்டக்களப்பு மாவட்ட பொலீஸ் அத்தியட்சகர் எல். ஆர். குமாரசிறி, மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பதில் பொறுப்பதிகாரி எம். ஐ. உவைஸ் மற்றும் காத்தான்குடி பொலிஸ் பொறுப்பதிகாரி நாயனசிறி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அத்தோடு குறித்த குழுவினர் ஈஸ்டர் குண்டு தாக்குதலிற்குள்ளான சீயோன் தேவாலயத்தையும் பார்வையிட்டிருந்தனர்.






# திருக்கோணேஷ்வரர் ஆலய பௌத்தமயமாக்கல் செயற்பாட்டை உடன் தடுத்து நிறுத்தக் கோரிக்கை

**த.சுபேசன்**

திருகோணமலை–திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலில் இடம்பெறுகின்ற பௌத்த மயமாக்கல் செயற்பாட்டை உடன் தடுத்து நிறுத்தி அப் பிரதேசத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறுசாவகச்சேரிப்பிரதேசசபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் குறித்த கோரிக்கையை முன்வைத்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

வரலாற்று பிரசித்தி பெற்ற திருகோணேஸ்வரர் ஆலய சூழலில் பௌத்தமயமாக்கல் சதித்திட்டம் இடம்பெற்று வருகின்றது.

தொல்பொருள் திணைக்களம் உல்லாசத்துறை அபிவிருத்தி என்ற பெயரில் சைவத் தமிழ் வரலாறுகளை மாற்றியமைக்க முயற்சிக்கின்றது.அத்துடன் இன–மத முரண்பாடுகளையும் ஏற்படுத்த முயற்சிக்கின்றது.இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் மிகத் தொண்மை வாய்ந்த பாடல் பெற்ற தலமாக விளங்கும் திருக்கோணேஸ்வரர் ஆலயம் சைவத்தமிழ் மக்களின் பூர்வீக நிலம்.இவ்வாறான பூர்வீக நிலத்தில் தொல்லியல் திணைக்களம் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை முன்னெடுப்பது ஒட்டுமொத்த சைவத்தமிழ் மக்களதும் மனங்களையும் புண்படுத்தும் செயற்பாடாகவே அமைகிறது.

உல்லாசத்துறையை விருத்தி செய்ய பல இடங்கள் இருந்தும் புனித ஆலய சூழலை தெரிவு செய்ய வேண்டியதன் அவசியம் என்ன?

திருக்கோணேஸ்வரர் ஆலய சூழலில் அத்துமீறி இடம்பெறுகின்ற பௌத்தமயமாக்கல் மற்றும் சிங்கள குடியேற்றங்களை உடனடியாக தடுத்து நிறுத்தி ஆலய சூழலை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# அகிம்சா சமூக நிறுவனத்தின் முயற்சியில் 51வது வீடு - மரப்பாலம் கிராமத்தில் வழங்கிவைப்பு



**(செங்கலடி நிருபர் சுபா)**

மட்டக்களப்பு – செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மரப்பாலம் கிராமத்தில் மிகவும் வரிய ஏழைக்குடும்பம் ஒன்றிற்கு அகிம்சா சமூக நிறுவனத்தின் முயற்சியில் வீடு ஒன்று அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. அகிம்சா சமூக நிறுவனத்தின் தலைவர் வி.விஜயராஜா அவர்களது முற்றிசியினால், கனடா நாட்டில் வசிக்கும் ஐயப்பன் பக்தர்களின் நிதிப்பங்களிப்பில், ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் குறித்த வீடானது அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான தொகையில் இவ் வீடு அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், மிகவும் நேர்த்தியானதும், வசதியான முறையிலும் குறித்த வீடு மிகவும் குறுகிய நாட்களுக்குள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அகிம்சா சமூக நிறுவனத்தின் முயற்சியில் அமைக்கப்பட்டுள்ள 51வது இவ் வீட்டினை உத்தியோக பூர்வமாக வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு மிகவும் சிறப்பாக இன்று காலை இடம்பெற்றது.

அமிம்சா சமூக நிறுவனத்தின் தலைவர் வி.விஜயராஜா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் செங்கலடி பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் கருணாகரன் அவர்களும், மரப்பாலம் கிராமசேவையாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்களுடன் கிராம மக்களும் கலந்துகொண்டருந்தனர்.

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206